# 2020

# ஆரம்பப் பிரிவில் அணைவரும் வாசிப்பர், எழுதுவர்

புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின்
செயற்றிட்ட வழிகாட்டல் கையேடு

வலயக் கல்விப் பணிமனை

தமிழ்ப் பிரிவு

புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக் கல்விப் பணிமனை,புத்தளம்
தமிழ்ப்பிரிவு

# "2020
# ஆரம்பப் பிரிவில் அனைவரும்
# வாசிப்பர், எழுதுவர்"

மேற்பார்வை :

திரு W.P.S.K. விஜேசிங்க - வலயக் கல்விப் பணிப்பாளர்

வழிகாட்டலும் ஆலோசனையும் :

திரு Z.A. சன்ஹிர் - உதவிக் கல்விப் பணிப்பாளர்
தமிழ்ப்பிரிவு -கல்வி அபிவிருத்தி

ஒழுங்கமைப்பு :

திரு Ve. அருணாகரன் - பாட இணைப்பாளர்
(ஆரம்பக்கல்வி)

அமுலாக்கம் :

திருமதி F.M. நவாஸ் - ஆசிரிய ஆலோசகர்
திரு A.G. ஆரிப் - ஆசிரிய ஆலோசகர்
திருமதி S.F. றௌபியா - ஆசிரிய ஆலோசகர்

உதவி

செல்வி S. ஞானேஸ்வரி - முகாமைத்துவ உதவியாளர்
செல்வி N.R. நப்லா - பயிலுனர்
செல்வி S. சிந்துஜா - பயிலுனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂතුමාගේ පණිවිඩය

දමළ මාධ්‍ය වැඩිම පාසල් සංඛ්‍යාවක් සහිත වයඹ පළාතේ පුත්තලම අධ්‍යාපන කලාපයේ, දමළ මාධ්‍ය සිසු සිසුවියන්ගේ අධ්‍යාපනික සාධනය ඉහළ නැංවීම අප සියළු දනාගේමසුවිශේෂී වගකීමක් පළමුව සඳහන් කිරීමට කැමැත් තමි.

එයට බලපෑ ප්‍රධාන සාධකය ලස වර්තමානය තුළ අ නකුත් කලාපවල සාමාන්‍ය පළ ශිෂ්‍ය සාධන මට්ටම් ජාතික මට්ටමට වඩා ඉහළින් පවත්වා ගත යන අවස්ථාවක පුත්තලම කලාපය එම අගයට වඩා පසුපසින් සිටීමත්,එම හේතුව මත වයඹ පළාත අ නකුත් පළාත්වලට සාපේක්ෂව පහළට යාමත් දැක්විය හැකිය.

එ හයින් දැනටමත් දමළ මාධ්‍ය පාසල්වල ප්‍රාථමික අංශයේඅත්‍යවශ්‍ය ඉ ගනුම් අවශ්‍යතා සාධන මට්ටම් වඩාත් ඉහළ මට්ටමකින් පවත්වා ගත යාම, සාක්ෂරතාවය ඉදිරියට ගන ඒම, කිසිදු පන්ති කාමරයක විශේෂ අවශ්‍යතා සියුත්හැර අ නක් සියළුම සිසුන්ට කියවීමේ ලිවීමේ හැකියාව සහතික කිරීම මම 2020වැඩසටහනේ ප්‍රධාන අරමුණයි .

එම අරමුණ සාර්ථක කරගැනීමට කලාපයේ දමළ මාධ්‍ය අධ්‍යාපන අංශය, සියළු විදුහල්පතිවරුන්,ගුරුඋපදේශකවරුන්,ගුරුභවතුන්,දැනුවත් කාර්මින් සිසු දරුවන්, දමාපියන් පාසල් සංවර්ධන සමිති කමිටු සාමාජිකයන්ට මම වැඩසටහනට දායකත්වය ලබා ගැනීමට යොමු කිරී මන් පුත්තලම අධ්‍යාපන කලාපයේ දමළ මාධ්‍ය අධ්‍යාපනය ඉහළට එසවීමේ කාර්යයට කැපවී මන් සාමූහිකව දායකත්වය ලබා දෙන මන් ආයාචනය කරමි.

ඩබ්.පී.එස්.කේ.විජේසිංහ,
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
කලාප අධ්‍යාපන කාර්යාලය,
පුත්තලම.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பிரிவு கல்விப் பணிப்பாளரின் செய்தி........

இன்றைய இளம் தலைமுறையினரிடையே முறைமையான எழுத்து, வாசிப்புப் பழக்கம் அருகிவருவது நாம் அறிந்ததொன்றே. ஓய்வு நேரப் பயன்பாட்டில் நவீன ஊடகங்கள் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டதும், சில அநாவசிய மேலதிக வகுப்புக்களும் இதற்கான பிரதான காரணங்களுள் சிலவாகும். தமிழ்மொழித் திறன்களும், முறைமையான பிரயோகங்களும் இன்றைய மாணவர் மத்தியில் செம்மையற்றுள்ளன. தவணை, பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் இவை பிரதிபலிக்கின்றன.

கடந்த வருடம் இரண்டாம் தவணையில், ஆரம்பப் பிரிவுப் பாட இணைப்பாளருடன் எமது பாடசாலை ஒன்றுக்கு மேற்பார்வைக்காகச் சென்று முதல்நிலை ஒன்று, இரண்டு என்பவற்றில் மதிப்பீடுகளை மேற்கொண்ட போது ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் கருக்கட்டியபதே "2020 -ஆரம்பப் பிரிவில் அனைவரும் வாசிப்பர், எழுதுவர்."

கருவாகி, உருவான இத்திட்டம் இன்று நடைமுறைப்படுத்தப்படுவதையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன். மாணவர்களின் தமிழ்மொழித் திறனை வளம்பக்க ஆசிரியர்களும் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும் என்பதையும் வலியுறுத்தவேண்டியுள்ளது.

எமது நோக்கத்தை நிறைவேற்ற ஆரம்பப் பிரிவுப் பாட இணைப்பாளர் திரு.வீ.அருணாகரன், ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கையேடு ஒன்றை சிறந்த முறையில் வடிவமைத்துள்ளார். அனைத்துத் தரப்பும் முனைப்புடன் செயற்பட்டால் நிச்சயம் மாணவர் பயனடைவர்.

2020 இல் ஆரம்பப் பிரிவில் கற்கும் அனைவரும் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் நம் அனைவரினதும் தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றுடன் கூட்டுமுயற்சியும் இன்றியமையாததாகும்

இச் செயற்றிட்டம் வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

Z.A. ஸன்ஹிர்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
தமிழ்ப் பிரிவு.

2017-01-25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "2020 - ஆரம்பப் பிரிவில் அனைவரும் வாசிப்பர், எழுதுவர்."

எமது கல்வி வலயத்தில் பொதுப் பரீட்சைகளில் தமிழ்மொழிமூலப் பாடசாலைகளின் அடைவு மட்டம் வீழ்ச்சியடைந்த போது பல்வேறு தரப்பினராலும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவ் வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிவதற்காக ஆசிரியர்களிடமும், வகுப்பறை ரீதியாக மாணவர்களிடமும் நேரடியான கள ஆய்வுகளை மேற்கொண்ட போது தாய் மொழியில் போதிய தேர்ச்சி அடையாமையே பிரதான காரணம் என்பது தெரிய வந்தது.

மொழியென்பது ஒலிப்புகள், குறியீடுகள் கொண்ட முறைமையினால் கருத்துக்களையும், உணர்வுகளையும் தொடர்பாடல் செய்யும் முறையாகும். கேட்டல் பிரித்தறிகை, பார்வை பிரித்தறிகை, உள இயக்கம், முன்வாசிப்பு (Pre Reading), முன்எழுத்து (Pre Writing) போன்ற திறன்கள் முன் மொழித்திறன்களாகும். இவை ஆரம்பப் பிரிவில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

அடிப்படையான மொழித் திறன்களை விருத்தி செய்வதில் ஆரம்பக் கல்வியின் வகிபாகம் முக்கியமானது. இவ் விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் முதன்மை நிலை ஒன்றில் மொழித்திறன் விருத்தியை களிப்பூட்டத்தக்க, உயிரோட்டமான வகைகளில் படிப்படியாக விருத்தி செய்வதும், ஒழுங்கமைப்பதும் இன்றியமையாததாகும். மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்ய ஆசிரியர் தமது மொழித் திறனை மேம்படுத்தல் வேண்டும்.

மாணவர்களின் மொழித்தின் விருத்தி மற்றும் கல்வி மேம்பாடு கருதி, புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்ப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கிணங்க, **"2020- இல் ஆரம்பப்பிரிவில் அனைவரும் வாசிப்பர், எழுதுவர்"** என்ற செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது

வீ. அருணாகரன்,
ஆரம்பப் பிரிவு பாட இணைப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அமுல்படுத்தும் முறை

கட்டம் 1 :
2017இல் முதன்மை நிலை ஒன்றில் முதலாம் தரத்தில் அமுல்படுத்தல்.

கட்டம் 2 :
2018இல் முதன்மை நிலை ஒன்றில் இரண்டாம் தரத்திற்கு அமுல்படுத்தல்.

கட்டம் 3 :
2019இல் முதன்மை நிலை இரண்டில் மூன்றாம் தரத்தில் அமுல்படுத்தல்.

2019 ஆண்டு இறுதியில் மூன்றாம் தரத்தில் கற்கும் மாணவர்கள் இச் செயற்றிட்டத்தின் ஊடாக மொழியில் அடிப்படைத் திறன்களில் தேர்ச்சி பெற்று 2020ம் ஆண்டு நான்காம் தரத்தில் அனைவரும் வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான திறன்களுடன் கற்றலில் ஈடுபடுவர். இதன் மூலம் தனிப்பட்ட முறையிலும் பொதுப் பரீட்சைகளிலும் மேன்மையடைவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமுலாக்கல் அட்டவணை

| ஆண்டு | கட்டம் | தரம் ஒன்று | தரம் இரண்டு | தரம் மூன்று |
|---|---|---|---|---|
| 2017 | கட்டம் 1 | √ | — | — |
| 2018 | கட்டம் 2 | √ | √ | — |
| 2019 | கட்டம் 3 | √ | √ | √ |

2017ம் ஆண்டு முதலாம் தரத்துடன் இரண்டாம், மூன்றாம் தரங்களுக்கான உப செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படும்.

## 2. ஆரம்பக் கல்விப் பிரிவில் மாணவர், ஆசிரியரிடையே மேலும் மேம்படுத்த வேண்டியவை

2.1 மாணவர்

- 2.I.i. உன்னிப்பான செவிமடுத்தல்.
- 2.I.ii. எழுத்துக்களை இனங்காணல்.
- 2.I.iii. உச்சரிப்புகள்.
- 2.I.iv. பொறிமுறையை அனுசரித்து எழுதுதல்.
- 2.I.v உயிர்க் குறிகளை அனுசரித்து வாசித்தல், எழுதுதல்.
- 2.I.vi. சொற்களை ஆக்கி எழுதுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 ஆசிரியர்கள்

2.II.i. மொழிவளம், மொழிச் செம்மை

2.II.ii. தேடிக் கற்றல்.

2.II.iii. மேலதிக வாசிப்பு.

2.II iv. நவீன விடயங்களை இற்றைப்படுத்தல்.

2.II.v. அழகியல் நயப்புகளும் வெளிப்பாடுகளும்

2.II.vi. மாணவர் பயிற்சிப் புத்தகத் திருத்தங்களில் மொழி வழுக்களை இனங்காணல்

## 3. பங்கேற்கும் ஆளணியினர்

### 3.I. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் (தரம் 1)

3.I.i மாணவர்களை இனங்காணலும் தகவல்கள் பேணலும். (தமிழ்ப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய)

3.I.ii பரிகாரக் கற்பித்தல்.

3.I.iii வருடாந்தத் திட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பாடக் குறிப்புகளுடன் கற்பித்தல்.

3.I.iv செயற்றிட்ட அடைவினை மதிப்பிட்டு உறுதிப்படுத்தல்.

3.I.v முன்னேற்ற அறிக்கை தயாரித்துக் கொள்ளல்.

3.I.vi வகை கூறல்.

### 3.II. தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும், தமிழ் மொழியில் ஆர்வம் உள்ள ஆசிரியரும்.

3.II.i ஓய்வு நேரங்களின் போது ஆரம்பப் பிரிவுக்குச் சென்று மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளை மேற்பார்வை செய்து வகுப்பாசிரியர்களுக்கு ஆலோசனையும், ஒத்துழைப்பும் வழங்குதல்.

### 3.III. அதிபர் / பகுதித் தலைவர்

3.III.i செயற்றிட்ட அமுல்படுத்தலுக்காக ஒத்துழைப்பு வழங்கல்.

3.III.ii. செயற்றிட்ட அமுல்படுத்தலை, மதிப்பீடு செய்தல்.

3.III.iii. உள்ளக மேற்பார்வை அறிக்கைகள் பேணல்.

3.III.iv. செயற்றிட்டம் தொடர்பான ஊக்குவிப்புகளும், தரச்சுற்றுகளும் நடாத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.IV. ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள்

3.IV.i பின்னடைவுப் பாடசாலைகளுக்கான தரிசிப்புகளை அதிகரித்தலும் ஆலோசனை வழங்குதலும்.

3.IV.ii இடர்படும் ஆசிரியர்களுக்கு உதவி புரிதல்.

3.IV.iii ஆசிரியர் திட்டமிடல்களுக்கேற்ப கற்றலின் தேர்ச்சியை மதிப்பிடல்.

3.IV.iv மாணவர்களை இனங்காணலும் ஆவணங்களைப் பரிசீலித்தலும் ஆலோசன்னை வழங்கலும்.

3.IV.v மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிடல்.

3.IV.vi செயற்றிட்ட அடைவுகளின் ஆவணங்களை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கல்.

3.IV.vii பாடசாலை தரிசிப்புக்கான அறிக்கையிடும் புத்தகத்தில் தொடர்ச்சியாகப் பதிவிடலும் அதன் முனனேற்றத்தை அவதானித்து ஆலோசனை வழங்கலும்.

3.IV.viii செயற்றிட்ட நிலைமைப் பகுப்பாய்வு தொடர்பான அறிக்கையை தமிழ்ப் பிரிவுக்கு வழங்குதல்.

3.V. தமிழ்மொழி ஆசிரியர் ஆலோசகர்கள்

3.V.i பாடசாலைத் தரிசிப்புகளில் ஆரம்பப்பிரிவில் செயற்றிட்ட அமுலாக்கம் பற்றி மதிப்பிடல்.

3.V.ii மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிடல்.

3.V.iii தாய்மொழி கற்பித்தல் தொடர்பான ஆலோசனைகளை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு வழங்குதல்.

3.V.iv அமுலாக்கல் பற்றிய அறிக்கையைத் தமிழ்ப் பிரிவுக்கு தொடர்ச்சியாக வழங்குதல்.

3.VI. ஏனைய ஆசிரியர் ஆலோசகர்கள்

3.VI.i. தங்கள் பாடசாலைகளில் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தல்.

3.VI.ii. செயற்றிட்ட மதிப்பீடு தொடர்பாக பாடசாலைத் தரிசிப்புப் புத்தகத்தில் அறிக்கையிடல்.

3.VI.iii அமுலாக்கல் பற்றிய அறிக்கையைத் தமிழ்ப் பிரிவுக்கு தொடர்ச்சியாக வழங்குதல்.

3.VII. பாட இணைப்பாளர்

3.VII.i. செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் பற்றிய கள ஆய்வுகளை மேற்கொள்ளல்.

3.VII.ii. ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களிடம் செயற்றிட்ட முன்னேற்றம் பற்றி அறிக்கை பெறுதல்.

3.VIII. உதவிக் கல்விப் பணிப்பாளர்

3.VIII.iii. செயற்றிட்ட செயற்பாடு தொடர்பான ஆலோசனையும், மேற்பார்வையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் ஒன்றில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அதி குறைந்த மட்டம்
- மொழிப் பொறிமுறை -

## தரம் - 1

### 1ம் தவணை

### வாசிப்பு


- படம் பார்த்து வாசிப்பார்.
- கதைப் படங்கள் வாசிப்பார்.
- எழுத்துக்களை வாசிப்பார்.
- குறில், நெடில் எழுத்துக்களை வாசிப்பார்.
- பார்வை பிரித்தறிதல், செவிமடுத்தல், பேசுதல், திறன்களை வெளிக்காட்டுவார்.

5) பார்வை பிரித்தறிகை


➢ படங்கள், உருக்கள், எழுத்துக்கள், சொற்கள், காட்சிப் படங்கள் போன்றவற்றில் வேறுபட்டவற்றை இனங்கண்டு கூறுவார்.

உ+ம் :-

✓ வித்தியாசமான படங்களைச் சுற்றி வட்டமிடுவோம்.
(நான்கு படங்களில் ஒன்று வித்தியாசம்)





✓ திசை மாறியுள்ள உருவைச் சுற்றி வட்டமிடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✓ இரு படங்களை ஒப்பிட்டு நான்கு வித்தியாசங்களை இனங்காண்போம்.





✓ எழுத்துக்களின் வித்தியாசத்தை இனம் காண்போம்.

ப ப ம ப

வ ல வ வ

✓ வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுவோம்.

மரம் மரம் மரம் வரம்

பாலம் காலம் பாலம் பாலம்

1) சொற்களுக்கிடையில் வேறுபட்ட ஓசையுள்ள சொல்லை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

2) செவிமடுத்து கிரகித்து துலங்குவார்.

3) எண்ணங்களையும், தேவைகளையும் வெளிப்படுத்துவதற்காக நட்புறவுடன் உரையாடுவார்.

4) எழுத்துக்களை இனங்கண்டு வாசிப்பார்.

2ம் தவணை

வாசிப்பு

தமிழ் குறில் எழுத்துக்களை இனங்கண்டு சரியாக உச்சரிப்பதுடன் வாசிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. வாசிக்கும் சொற்களில் (ஒன்று தொடக்கம் 4 எழுத்து சொற்கள்) உள்ள எழுத்துக்களை இனங்கண்டு வாசிப்பார். (படங்களுடன் உள்ள சொல் அட்டைகள்)

உ+ம் பாடு, பாடம், பட்டம்


பாடு


பட்டம்


பாடம்

ii. உயிர்க் குறிகளை அனுசரித்து எழுத்துக்களை இனங்கண்டு வாசிப்பார்.

(எழுத்துக்களுடன் 'ா', 'ி', 'ீ', 'ெ', 'ே', 'ை', 'ொ', 'ோ' ஆகிய உயிர் குறிகளை சேர்த்து உரிய ஒலியுடன் வாசிப்பர்)

உ+ம் தா, சி, நீ, பெ, மே, கை, சொ, போ

எழுத்துக்களுடன் "ா" சேர்த்து "ஆ" ஒலியுடன் வாசிப்போம்
க → கா
எழுத்துக்களுடன் "ி" சேர்த்து "இ" ஒலியுடன் வாசிப்போம்
ம → மி
எழுத்துக்களுடன் "ீ" சேர்த்து "ஈ" ஒலியுடன் வாசிப்போம்
த → தீ
எழுத்துக்களுடன் "ெ" சேர்த்து "எ" ஒலியுடன் வாசிப்போம்
ப → பெ
எழுத்துக்களுடன் "ே" சேர்த்து "ஏ" ஒலியுடன் வாசிப்போம்
வ → வே
எழுத்துக்களுடன் "ை" சேர்த்து "ஐ" ஒலியுடன் வாசிப்போம்
க → கை
எழுத்துக்களுடன் "ொ" சேர்த்து "ஒ" ஒலியுடன் வாசிப்போம்
ம → மொ
எழுத்துக்களுடன் "ோ" சேர்த்து "ஓ" ஒலியுடன் வாசிப்போம்
ப → போ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ம் தவணை (வாசிப்பு)

பாடப்புத்தகம், ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள பொருத்தமான விடயங்களை பயன்படுத்த முடியும்.


உ+ம் :- ஆசிரியர் வழிகாட்டியில் 89 ஆம் பக்கம் தொடக்கம் 99ஆம் பக்கம் வரையுள்ள பொருத்தமான செயற்பாடு.


## எழுத்து

### 1ம் தவணை


- எழுத்து முன்னாயத்தம்

➢ முன்னெழுத்து திறன்களை விருத்தி செய்வதற்காக வரைவார், எழுதுவார், நிறந்தீட்டுவார்.





புள்ளிக் கோட்டில் வரையப்பட்ட எழுத்தின் மேல் எழுதுதல்



- தனி எழுத்துக்களை இனங்கண்டு கோட்டினுள் உறுப்பமைய எழுதுவார்.

ட ப ம ய ந ச க

இரட்டை கோடு ( ஜப்னா றூள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் எழுத்துக்கள் (30) எழுதுவார்

**அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ**

**க் ச் ட் த் ப் ற் ங் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ள் வ் ழ் ல்**

சொற்களையும், தொடர்களையும் விளங்கி எழுதுவார்.

## 2ம் தவணை

- வகுப்பறை, சிற்றுண்டிச் சாலையில் உள்ள பொருள்களின் பெயரை எழுதுதல்.

  உ+ம் :- வகுப்பறை
  மேசை, கதவு, புத்தகம்

  உ+ம் :- சிற்றுண்டிச்சாலை
  பால், பிட்டு, தோசை, இடியப்பம், கௌபி, பாற்சோறு

- ஆத்திசூடி வரிகளில் உள்ள சொற்கள், சொற்றொடர்களை எழுதுவர்.

**அறம் செய விரும்பு**

**அறம் ஆறுவது**

## 3ம் தவணை

- படங்களைப் பார்த்து சொற்கள், தொடர்களை எழுதுதல்.
  (ஈரெழுத்து, மூவெழுத்து சொற்கள்)

கல், மரம், சீப்பு, வாத்து,







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றுலா இடங்களை அறிமுகப்படுத்தல் (நேரடி அனுபவம், இணையத் தளத்தில்)


**(www.museum.gov.lk)**

அவற்றில் பிடித்த மூன்று சொல் எழுதுவார்.


படம் பார்த்து சிறிய சொற்களை எழுதுவார்

- படம் பார்த்து சிறிய கருத்துள்ள தொடர்களை எழுதுவார்.

பசு புல் மேயும்



கப்பல் கடலில் செல்லும்



- வகுப்பறையில் உள்ள புத்தக மூலையில் இருந்து சிறுவர் கதை நூலில் பின்வரும் தகவல்களைப் பூரணப்படுத்தி எழுதுவார்.
  - நூலின் பெயர்
  - நூலாசிரியரின் பெயர்
  - விருப்பமான கதை / பாடல் தலைப்பு

## தமிழ்ப் பிரிவினால் வழங்கப்பட்டள்ள மாதிரி வகுப்பறைப் பட்டியலுக்கு மேலதிகமாக தரம் 1 இல் இருக்க வேண்டியவை

1) தமிழ் நெடுங்கணக்கு தொடரொழுங்கில் உள்ள எழுத்துக்கள் 247 உம் காட்சிப்படுத்தப்படல். (4'x 4' எழுத்து காட்சிப்படம்)
2) உயிர்க் குறிகளும் அவற்றுடன் சேர்ந்து வரும் எழுத்துக்களும் காட்சிப்படுத்தப்படல்.
3) கரும்பலகையை மூன்றாகப் பிரித்து எண், எழுத்து, சித்திரங்களுக்கு ஏற்ப தயாரித்துக் கொள்ளல்.
4) மாணவர் தொகைக்கு ஏற்ப தனி எழுத்துக்கள், சொல் அட்டைகளைத் தயாரித்து மாணவர் மேசையில் பெட்டியில் போதிய அளவு வைத்துக் கொள்ளல்.
5) ஆத்திசூடி எழுதப்பட்ட அட்டைகள் காட்சிப்படுத்தல்.
6) சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் கதைகள், பாடல்கள் உடன் புத்தக மூலை.
7) சிறுவர் இணையத்தளங்களைக் காட்சிப்படுத்தல். (14ம் பக்கம் பார்க்க..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 2

தரம் 2, தரம் 3 என்பவற்றிற்குரிய பூரண வழிகாட்டல் கையேடு அடுத்த வருடம் வழங்கப்படும்.

## 1ம் தவணை

## வாசிப்பு

எழுத்துக்களை இனங்கண்டு சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார்.

1) சொற்களை ஒழுங்குபடுத்தி வாசிப்பார்.

➢ உ+ம் ஒழுங்கின்றி வாசித்தல்

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பாடசாலைக்குச் | நான் | சென்றேன் |

➢ ஒழுங்குபடுத்தி வாசித்தல் :-

| 2 | 1 | 3 |
|---|---|---|
| நான் | பாடசாலைக்குச் | சென்றேன் |

2) சிறு வாக்கியம் வாசிப்பார்.

- நான் பாடம் படித்தேன்

## 2ம் தவணை

1. கிழமை, நாட்கள், மாதங்களின் பெயர்களை வாசிப்பார்.

   உ+ம் :- திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

2. வினைச் சொற்களை சொல் அட்டையிலிருந்தும் வாக்கியத்திலிருந்தும் வாசிப்பார்.

உ+ம் :- ஓடினான், செய்வான், படித்தான், விழுந்தது, இருந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் தவணை

- சிறிய சுவரொட்டிகளை வாசிப்பார்.

(உ+ம்) புத்தளம் தமிழ்ப் பிரிவினால் நடாத்தப்படும்
சிறுவர் தின நிகழ்ச்சி

இடம்:- ஆசிரியர் மத்திய நிலையம்
மன்னார் வீதி
புத்தளம்
திகதி:- 2017.10.01
நேரம்:- மு.ப. 08.00 மணி
பி.ப. 01.00 மணி

(வாசித்து, கிரகித்துள்ளாரா? என வினா கேட்டல்.)

1ம் தவணை

எழுத்து

- அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றிற்கமைய எழுதுவார்.

- எழுதும் போது எழுத்துப் பொறிமுறைக்கு அமையவும். எழுத்து, சொல் ஆகியவற்றுக்கு இடையில் ஏற்ற இடைவெளிகளை விட்டு கோடுகளுக்கிடையே முறையாக எழுதுவார்.

(இரட்டை கோடு ( ஜப்னா றூள்- **Jaffna Rule**)

உ+ம் :- பிரதி பண்ணி எழுதலாம்.

- எனது ஆசிரியர் அன்பானவர்.
- இது அழகான பாடசாலை.

- உயிர்க் குறிகளைக் கொண்ட சொற்களையும் சிறிய வாக்கியங்களையும் எழுதுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ம் தவணை

- எழுவாய், பயனிலை என்பவற்றை உரிய முறையில் (மூன்று சொற்கள்) பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்களை ஆக்கி எழுதுவார்.

உ+ம் :- சூரியன் காலையில் உதிக்கும்.

## 3ம் தவணை

1) பெயர்ச் சொற்கள் (பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்) வினைச் சொற்கள் (யாதாயினும் ஒரு செயலைக் குறிப்பது வினைச் சொற்கள்) வாக்கியம், பந்தியிலிருந்து இனம்கண்டு எழுதுவார்.

2) தனது பெயர், ஊர் பற்றிய விபரங்களை சரியாக எழுதுவார்.

# தரம் - 3

## 1ம் தவணை

### வாசிப்பு

வாசிப்பு பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

3) நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசிப்பார்.

(.) முற்றுப்புள்ளி
(,) காற்புள்ளி
(?) வினாக்குறி

(நிறுத்தற் குறிகள் அனைத்தும் கொண்ட பந்தியை உரத்து வாசித்துக் காட்டுவார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் தவணை

1) பழமொழிகளை வாசிப்பார்.

3ம் தவணை

2) கதைகளை மௌனமாக வாசித்து நான் விரும்பிய பகுதியை நடித்துக் காட்டுவார்.

### செயற்றிட்ட இனங்காணல் மதிப்பீட்டுக்கான பயிற்சிகள்.

### 1ம் தவணை (வாசிப்பு, எழுத்து)

உ+ம் : 1ம் தர ஆசிரியர் வழிகாட்டியில் 35ம் 36ம் பக்கத்திலுள்ள செயற்பாடு v,vi,vii யை செயற்படுத்தலாம்.

### 2ம் தவணை (வாசிப்பு, எழுத்து)

உ+ம் : 1ம் தர ஆசிரியர் வழிகாட்டியில் 72ம், 73ம், 74ம் பக்கத்திலுள்ள செயற்பாடு iv, v,vii யை செயற்படுத்தலாம்.

### 3ம் தவணை (வாசிப்பு, எழுத்து)

உ+ம் : 1ம் தர ஆசிரியர் வழிகாட்டியில் 96ம், 97ம், 98ம் பக்கத்திலுள்ள xi, xii, xiii யை செயற்படுத்தலாம்.

குறிப்பு :-

1. மாணவர்களின் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப இது போன்ற மதிப்பீட்டு பயிற்சிகளை தயாரித்து செயற்படுத்துவதற்கு பூரண சுதந்திரம் உள்ளது.

2. மாணவர் இனங்காணல் செயற்பாடுகளின் மாதிரிகள் திகதிகள் குறிப்பிட்டு கோவைப்படுத்திக் கொள்வது சிறப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்றிட்ட கால அட்டவணை

| திறன் | செயற்பாடு (தேர்ச்சிமட்டம்) | 1ம்தவணை திகதி | | | | | 2ம்தவணை திகதி | | | | | 3ம்தவணை திகதி | | | | | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாசிப்பு | வாசிப்பு பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார் | | | | | | | | | | | | | | | | |
| எழுத்து | எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார். | | | | | | | | | | | | | | | | |
| வாசிப்பு | பொருட்களின் பெயர்களை வாசிப்பார். (தொடர்பாடலுக்காக) | | | | | | | | | | | | | | | | |
| எழுத்து | பொருட்களின் பெயர்களை எழுதுவார் (வகுப்பறை, சிற்றுண்டிச்சாலை) இலகு எழுத்துக்களைக் கொண்ட சொல்வதெழுதல் | | | | | | | | | | | | | | | | |
| வாசிப்பு | ஐந்து எழுத்துக்கு உட்பட்ட இலகுவாக விளங்கக்கூடிய இரு சொற்கள் உள்ள காட்சிப் படங்களில் உள்ள வசனத்தை வாசிப்பார் | | | | | | | | | | | | | | | | |
| எழுத்து | 1. ஐந்து எழுத்துக்கு உட்பட்ட இலகுவாக எழுதக்கூடிய இரு சொற்கள் கொண்டு வசனத்தை எழுதுவார். 2. இது போல் உள்ள சொற்களுக்கான சொல்வதெழுதல் பயிற்சி. | | | | | | | | | | | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org